International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 2 April - June 2026

Published on 14, April - June 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# சங்ககாலப் பண்பாட்டில் உயிர்ப்பலி

**முனைவர் ம. ரம்யா**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
செல்லம்மாள் மகளிர் கல்லூரி, சென்னை - 32

**ஆய்வுச் சுருக்கம்**

காலம் காலமாகப் பழமரபுகளைக் காத்து மனித மனம் ஆழ்ந்து செயல்படுகின்றது. சடங்கு முறைகள் இப்பணிக்குப் பெரிதும் துணைபுரிகின்றன. நம் முன்னோர் செய்த செயல்களை எந்தக் காரண காரியமின்றி ஆராய்ச்சி செய்யாமல் தாம் கண்டவாறே பின்பற்றுவது அல்லது நிகழ்த்துவதே சடங்கு முறை ஆகும். அந்த வகையில் உயிர்ப்பலி நிகழ்த்தப்படுவதைப் பற்றிய புரிதலை முன்வைக்கிறது இந்த ஆய்வுக் கட்டுரை.

**முதன்மைச் சொற்கள்:** சங்க இலக்கியம், பலியிடல், இடுபலி, குருதி, பலி பொருட்கள், பலியிடுபவர், குருதிப்படையல், ஆடுபலி, நரபலி, வேலன்வெறியாடல், பேய், உலகாய்தம்.

## முன்னுரை

காரண காரியம் பற்றிய அறிதல் இன்றி உயிர்ப்பலி சார்ந்த சடங்குகள் பல நடந்து கொண்டு தான் உள்ளன. தற்காலத்தில் பிணத்துடன் ஒருவிலங்கைப் பலி கொடுத்தல் நிழ்கின்றது. இறந்தோருக்குச் செய்யும் ஈமச்சடங்குகளிலும் மூதாதையர் வழிபாட்டிலும் உயிர்ப்பலி கொடுப்பது வழக்கில் உள்ளது. மனிதன் தான் விரும்பியதைப் பெறவும் உயிர்ப்பலி கொடுக்கும் வழக்கம் நடைமுறையில் இருப்பதை அறியமுடியும். புதையல் எடுப்பதற்குச் சட்டத்திற்குப் புறம்பாக மறைவாக மனிதப்பலி கொடுப்பது இன்றளவும் நடைபெறுகிறது. மனித சமூகம் நாகரிக வளர்ச்சிபெற்ற நிலையிலும் இங்கொன்றும் அங்கொன்றுமாக உயிர்ப்பலி நடைபெறுவதைச் செய்தித்தாள்களில் காணமுடிகின்றது. இன்று உயிர்ப்பலி தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்பதைப் பல சடங்குமுறைகள் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது. உயிர்ப்பலியின் பழமையைச் சங்க இலக்கியத்தை முன்நிறுத்தி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## இடுபலி

இடு பலி என்பது பலி சடங்கிற்குத் தேவையான பொருள்களே. இந்த வகையில் உயிர்ப் பொருளும் பிறபொருள்களான குழந்தை, ஆடு, தினை, தானியங்கள், குருதி, செந்தினை, கள், நெய், பூ, முரசம், எண்ணெய் முதலியவை பொதுவான இச்சடங்கு முறைக்குப் பயன் படுத்தப்படுகின்றன.

'பலிக் கள் ஆர் கைப் பார் முது குயவன்

**இடுபலி நுவலும் அகன்தலை மன்றத்து**

**விழவுத்தலைக் கொண்ட பழவிறல் மூதூர்ப்"**

(நற்றிணை, 293:2-4)

என்ற நற்றிணைப் பாடல் பலிகொடுப்பவர், பலிபொருட்கள், பலி கொடுக்கும் முறை பற்றிச் சிறப்பாக எடுத்துரைக்கிறது. மேற்கண்ட பாடல், பலி கொடுப்பவர் கள்ளினைக் குடித்து விட்டுக் கடவுளுக்கு என்னென்ன படையல் செய்யவேண்டும் என்பதைப் பழங்குடியைச் சார்ந்த குயவன் வழி எடுத்துரைக்கும் வண்ணம் அமைந்துள்ளது. கள்ளுண்ட பின் தெய்வத்திற்கு விழா எடுப்பதைப் பற்றி ஊர் மன்றத்துக்குச் சொல்லும் சூழல் அமைக்கப் பட்டுள்ளது. இதன் மூலம் பலி செய்யும் பொருள், நிகழ்த்தும் முறைகளை எடுத்து உரைக்க ஒருவர் செயல்பட்டார் என்பதை அறியமுடிகின்றது.

## குருதிப்பலி

ஆதி மனிதன் உயிர்ப்பு சக்தியாக குருதி யைக் கருதினான். விலங்குகள் இரத்தத்தை இழப்பதன் மூலமாக உயிரிழக்கிறது என்பதை அறிகிறான் பழங்கால மனிதன். இதன் வழி மனிதன் இரத்தத்தில் 'உயிர்ப்புச் சக்தி' இருப்பதாக நம்புகின்றான். "இரத்தம் குறைந் தால் உயிரிழப்பை ஏற்படுத்தும் என்று உயிர்ப்புச் சக்தி குன்றிக் காணப்படும் வயதில் முதிர்ந்தோர், உயிர்ப்புச் சக்தியிழந் ததால் உயிரிழந்தோர் மீது இரத்தத்தைத் தெளிப்பதன் வழி உயிர்ப்பிக்கவியலும் என்று கருதத் தலைப்பட்டான்" (மகேசவரன்.சி, வாழ்வியல் களஞ்சியம்:945). வேட்டைச் சமூகம் தொடங்கி நவீன மனித வாழக்கை வரை 'இரத்தப்படையல்" சடங்கு முறையாக மேற்கொள்ளப்பட்டு வருவதை அறிகிறோம்.

உயிர்ப் பலியில் மிக முதன்மையாது இரத்தப் படையல். "விலங்குகள் தொடங்கி மனிதர் வரை பலியாகக் கொடுப்பதில் இரத்தம் முதன்மைப் படையற் பொருளாவதால், 'இரத்தப்படையல்' முதல் வகையானது" (மகேசுவரன்.சி, வாழ்வியல் களஞ்சியம்:945). இந்த வகையில் சங்க இலக்கியத்தில் இரத்தத்தைக் குருதி எனக் குறிப்பது இடம் பெற்றுள்ளது. இத்தகு 'குருதிப் பலி'யைப் பழம்பெரும் தமிழ்ச் சமூகம் எந்த வகையில் கையாண்டுள்ளது என்பதை அறியமுடியும்.

பகைவர் நாட்டில் இருந்து கொண்டு வந்த கொள்ளைப் பொருளை உணவாக்கி உண்ணும் வீரர்களின் சடங்குமுறையில் குருதிப்படையல் தனித்த இடம்பெற்றுள்ளது.

**"செங்கல் விருப்பொரடு கூடம் முற்றிய**

**உருவச் செந்தினை குருதியொடு தூஉய்"**

(பதிற்றுப்பத்து, 19:5-6)

வயவர் என்னும் போர் வீரர்கள் முழங்கும் போர்முரசம் போருக்குப் புறப்படுவதற்கு முன்பே நீராட்டப்பட்டது. முரசானது, நீராட்டு விழாவின்போது செந்தினைத் தூவி வழிபாடு செய்யப்படும். பலி கொடுத்த குருதி கலந்திருந்ததால் அந்தத் தினை மஞ்சள் நிறம் மாறிச் செந்தினை ஆயிற்று என்பதை அறியமுடிகின்றது.

ஐந்து திணை மக்களும் தன் சுற்றத்தாரும் வாழ்கின்ற மக்களும் வெற்றி முரசு கொண்ட வேந்தரும் வேளிர்களும் தம்முள் ஒன்றுபட்டுச் செயற்பட உறுதி கூறி முயன்றும், அதன் வழி கருங்கண் பேய்மகள் அஞ்சும்படி தெய்வத் திற்குப் பலிகொடுத்தனர்.

**"கருங்கண் பேய்மகள் கைபுடையூஉ நடுங்க**

**நெய்த் தோர் தூஉய நிறைமகிழ் இரும்பலி"**

(பதிற்றுப்பத்து, 30:36-37)

உயர்வாக எண்ணக்ககூடிய பிண்டத்தைத் தெய்வத்திற்குப் படையல் செய்வர். அந்தப் பிண்டத்தை எறும்பும் மொய்க்காத தன்மை கொண்ட இரத்தமும் கள்ளும் சேர்த்து வைக்கப்பட்டப் பெரிய பலியினையும் காக்கை பருந்து முதலியன உண்ணும் என்பது பழந்தமிழரின் நம்பிக்கையாகத் திகழ்ந்துள்ளது.

பகைவர்களை வென்று அரிய அரண்களைக் கைப்பற்ற கூடிய பெரிய யானைப்படை உடைய குட்டுவன் போருக்கு முன்பும் இரத்த பலி கொடுத்தான் என்பதன் வழி பலி வழக்கம் அப்போது இருந்திருக்கிறது என்பதை அறியமுடிகின்றது. இதற்குச் சான்றாக,

**"அகன்கண் வைப்பின் நாடுமன் அளிய:**

**விரவுவேறு கூலமொடு குருதி வெட்ட**

**மயிர்புதை மாக்கண் கடிய கழற"**

(பதிற்றுப்பத்து, 29:10-13)

என்ற பாடலைக் குறிப்பிடலாம். பகைவர் நாட்டை பரவிச் சென்று, போர் நடத்தும்

பல்யானைக் குட்டுவனுடைய எல்லை இல்லாப் படைகள். போருக்குச் செல்வதற்கு முன்னர்ப் பலவகைத் தானியங்களோடு, இரத்தம் கலந்த பலியை விரும்பிப் பலி கொடுக்கப்படுகின்றது. இச்சூழலில் போரில் வெற்றி பெற்று அரண்மனைகளைக் கைப் பற்றும் சூழலில் இப்பலி சடங்கு நடைபெறும் சிறப்பை மேற்கண்ட பாடல் மூலம் அறிய முடிகின்றது.

புறநானூற்றுப் பாடல்களில் இரத்த பலி என்பது மூன்று இடங்களில் இடம்பெற்றுள்ளது. இவற்றில் இரத்தமாகிய பலியையுடைய வீரமுரசு பெற்றுக் கொள்ளும் வகையில் அமைந்துள்ளது. போர் செய்ய செல்வதற்கு முன்னர் முரசு முழங்கும் சில சடங்குகள் நிழ்த்தப்படுகின்றன. அதில் குருதிப் பலியும் இடம் பெறுகின்றது. முரசுக்குப்பலி கொடுப்பது போல பாடல்கள் அமைந்துள்ளன. இடிபோல் முழங்கியதாகவும் பின்வரும் வரிகள் மெய்பிக்கின்றன.

**“குருதி வேட்கை உருகெழு முரசம்”**
(புறநானூறு, 50:5)

**“பலிபெறு முரசம் பாசறைச் சிலைப்ப”**
(புறநானூறு,362:3)

**“குருதிப் பலிய முரசுமுழக்கு ஆக”**
(புறநானூறு, 369:5)

இப்பாடல்கள் வழி அச்சத்தை ஏற்படுத்தும் முரசானது குருதிப்பலியை வேண்டி விரும்பி யது. நாட்பலி பெற்ற முரசானது பாசறையில் ஒலிக்கப் பெற்றது. குருதிப் பலிபெறும் முரசு இடி முழக்கமாக முழங்கியது எனக் குருதிப்பலியில் போர் முரசிற்கு இடமளித் தமையைப் புறநானூற்றுப் பாடல்களின் வழி அறியமுடிகின்றன.

## ஆடு பலி

பலிச்சடங்கு முறைகளில் இரத்தபலி என்பது ‘உயிர்ப்புச் சக்தியாக’ இருக்கும் நிலையை யும்; வெற்றிக்கு அல்லது வெற்றி பெறுவதற்கு நிகழ்த்தப்படும் சடங்குமுறையாகவும் இருப்பதை அறியமுடிகின்றது. அதே வகை யில் நேரடியாக விலங்கைப் பலி கொடுக்கும் நிகழ்வு சங்கஇலக்கியத்தில் சுட்டப்படுகின்றது. ஆடு பலி கொடுத்தல் என்னும் நிகழ்வு பழங்காலந் தொடங்கி இன்றைய நவீன நாகரிகம் அடைந்த சூழலிலும் நடைபெற்று வருகின்றது.

அந்த வகையில் புதுச்சேரி தொண்டமாநத்தம் என்னும் கிராமத்தில் ”பிடாரி அம்மன் கோவிலில்’ ஆடி மாதங்களில் ஊர்மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து அமாவாசைக்குப் பின் வளர்பிறைத் திங்களைத் தேர்வு செய்து. தேரோட்டம் நடைபெறும் அன்று ஊர் மக்கள் தங்கள் வீடுகளின் முன் ஆடு வெட்டிப் பலி கொடுத்து வேண்டிக் கொள்வர் அல்லது வேண்டியது நிறைவேறியது எனப் பலி கொடுக்கப்படும் நிகழ்வு காலங்காலமாக நிகழ்ந்து வருகின்றது.

சங்கப்பாடல்கள் பலவற்றிலும் ஆட்டுப்பலி இடம் பெற்றுள்ளது. தலைவனும் தலைவியும் காணாத தருணம் தலைவிக்குப் பசலை நோய் படர்ந்தது. இதனைத் தலைவியின் தாயோ இந்நோய் முருகவேள் தீண்டியமை யால் உண்டாகியிருக்குமோ என்று எண்ணுகிறாள். இதற்காக வெறியாட்டு நிகழ்த்த வேண்டும் எனும் நிலைக்குச் செல்கின்றாள்.

**“அணங்கு என உணரக் கூறி, வேலன்**

**இன் இயம் கறங்கப் பாடி,**

**பல் மலர் சிதறிப் பரவுறு பலிக்கே”**
(நற்றிணை, 322:10-12)

என்ற பாடல் வெறியாட்டு நிகழ்வை முன் வைக்கிறது. தலைவியை அணங்கு தாக்கியது என எண்ணித் தலைவியின் தாயே முருகனுக்கு வெறியாட்டு நடத்த இருக்கின்றாள். அந்நிகழ்வைப் பற்றித் தோழி தலைவியிடம் சொல்லும் செய்தியில் முருகனை வழிபடல், முருகனுக்கு ஆட்டினைப் பலிகொடுத்தல் போன்ற தகவல் இடம்பெறுவதை அறிய முடிகின்றது.

இப்பாடலில் பலி கொடுத்தல் சடங்கில் இசைக் கருவிகள் பயன்படுத்தப்பட்டமை, முருகனுக்குப் பலி கொடுத்து அணங்கை விரட்ட நினைத்தல், உயிர் பொருளான ஆட்டினைப் பலிகொடுத்தல் போன்ற செய்தி கள் இடம் பெற்றமையை அவதானிக்க முடிகின்றது.

அணங்கு தலைவியிடம் இருந்து நீங்க வேண்டும் என்னும் காரணத்தால் வெறியாட்டு எடுப்பது பழமைச் சமூகத்தின் ஒரு வழக்கமாகக் காணப்படுகின்றது. இந்தச்

சடங்கு முறையில் உயிர்ப் பலியிடும் நிகழ்வு நடைபெறுகின்றது. இதை,

**மறிக்குரல் அறுத்துத் தினைப்பிரப்பு இரீஇச்**

**செல்லாற்றுக் கவலைப் பல்லியம் கறங்க**

**தோற்றம் அல்லது நோய்க்கு மருந்து ஆகா**

(குறுந்தொகை, 263:1-3)

என்ற குறுந்தொகை பாடல் வழி அறியலாம். ஊர்ப்புறத்தே செய்ப்படும் இச்சடங்கு முறையில் இசைக்கருவிகள் இசைக்க, தினையுடன் தானியங்களைப் பரப்பி, ஆட்டுக் குட்டியை அறுத்து அணங்கைத் தலைவியிடம் இருந்து ஓட்டுவதாகத் தாய் எண்ணுகிறாள். இச்சடங்கு முறையை மேற்கோள்ள வேலன் என்பவர் செயல்படுவதை அறியமுடிகின்றது.

தலைவியின் நோய்க்குக் காரணமாக இருப்பது தலைவனது பிரிவே. இந்த நிலைப்பாட்டைக் கருத்தில் கொள்ளாமல் வெறியாட்டு நிகழ்வுகளில் பலி நடக்கின்றது. இது தவறு என்ற நிலைப்பாட்டில் தோழி அறத்துடன் இருப்பதை அறியமுடிகின்றது.

**பல்வேறு உருவின் சில் அவிழ் மடையொடு**

**சிறு மறி கொன்று இவள் நறுநுதல் நீவி**

(குறுந்தொகை,362:3-4)

என்ற பாடல், பல்வேறு நிறங்களைக் கொண்ட தானியங்கள் சிலவற்றையும் சோற்றையும் சிறிய இளம் ஆட்டுக் குட்டியைக் கொன்றும் தலைவியின் நெற்றியைத் தடவி முருகனை வணங்கிப் பலி கொடுக்கும் சமூகமாக இருந்துள்ளதை வெளிப்படுத்துகிறது.

தலைவன் மீது கொண்ட காதலால் தலைவி மெலிவுற்றாள். ஆனால் இதை அறியாத தலைவியின் அன்னையோ மகளுக்கு அணங்கு துயர் ஏற்பட்டுள்ளது என முருக வழிபாட்டுக்கு ஏற்பாடு செய்துள்ளார். அதில் ஆடு பலி இடுதல் தொடர்பான செய்தி இடம்பெற்றுள்ளதைக் காணலாம்.

**வெறி அயர் வியன்களம் பொலிய ஏத்தி**

**மறிஉயிர் வழங்கா அளவைச் சென்றுயாம்**

(அகநானூறு,242:11-12)

தலைவியின் துயரத்தை அறிய வேண்டும் அல்லது சரி செய்ய வேண்டும் என நினைக்கும் தாய் முருகன் வழிபாட்டை நடத்துகின்றாள். இதில் பூசாரியாக வேலன் அனைத்துவிதப் படையல் ஏற்பாடுகளையும் செய்கின்றார். படையல்களைப் பரப்பி முருகனை வழிபடும் பொருட்டு ஆட்டுக் குட்டியைப் பலி கொடுக்கும் நிகழ்வு அமைந்துள்ளதைக் காணமுடிகின்றது.

**குழந்தை – பேய் – நரபலி**

பலி கொடுக்கும் வழக்கம் சங்க காலத்தில் இருந்துள்ளது. இதில் காய்கறி, தானியங்கள், சமைக்கப்பட்ட உணவு, பூ, விலங்குகள் என இன்றளவும் பல பலி பொருட்கள் உள்ளன. பெற்ற தாய் குழந்தையைப் பேயிடம் கொடுத்த செய்தி உவமையாகச் சொல்லப் பட்டுள்ளதைச் சங்க இலக்கியப் பாடல் வழி அறியமுடிகின்றது.

இந்தப்பாடலில் தலைவனை நோக்கித் தோழி நீ தலைவியிடம் இன்புற்றாய். ஆனால் இப்போது திருமணம் செய்து கொள்ளாமல் காலம் தாழ்த்தி எங்களைத் துன்பத்தில் ஆழ்த்துகின்றாய். எனவே, நாங்கள் நினக்கு உரியவர்களாக ஆகவில்லை. கையை நீட்டிய பேயிடம் குழந்தையைக் கொடுத்து விட்ட தாய்போல நாங்களும் எங்கள் நாணத்தை உன்னிடம் இழந்துவிட்டோம். இனி இந்த ஊர் எங்களைக் குறித்துப் பழி தூற்றுவதாக என்கிறாள் என்பதை,

**மாசில் கற்பின் மடவோள் குழவி**

**பேஎய் வாங்கக் கைவிட்டாங்கு**

(நற்றிணை,15:7-8)

என்ற பாடல் குறிப்பிடுகிறது. குழந்தையைத் தாய் பேயிடம் ஒப்படைக்கும் செய்தி உவமையாகக் கூறப்பட்டுள்ளதை அறியமுடிகிறது. குழந்தையைப் பேயிடம் ஒப்படைத்ததால் அப்பேய் குழந்தையை நரபலியிட்டு உணவாக உட்கொள்ளும் என்பதாகச் சிலர் கற்பிதம் செய்து கொள்வர். எந்தத் தாயும் குழந்தையை மற்றவரிடம் கொடுக்க அஞ்சுவாள், குறிப்பாக பேயிடம் கொடுக்க அஞ்சுவாள், அவளே நாணமில்லமால் குழந்தையைக் கொடுத்த செய்தியை உவமையாக்கிக் கூறும் தோழியின் திறம் பாராட்டத்தக்கது.

**பலி - உலகாயதம்**

பகுத்தறிவுச் சிந்தனைகள் தந்தைப் பெரியார் காலத்தில் விரிவடைந்தது என்றாலும்

சங்ககால அளவிலேயே உலகாய்தம் என்ற கொள்கை நிலவி வந்ததை அறியலாம். ”உலகாயதம் ஒரு கூட்டுசொல். இது உலக + ஆய்தம் எனப் பிரியும். “உலகைப் பற்றிய ஆராய்ச்சி“ என்பது இச்சொல்லின் பொருளா கும். ஆய்தம் என்ற சொல் “ஆய்“ என்ற அடிச்சொல்லின் வழியாகப் பிறந்தது. ஆய்-ஆய்தல்-ஆராய்ச்சி-ஆய்தம் ஆகிய சொற்கள் நுண்மை, ஒரு பொருளின் நுண்மை குறித்த ஆய்வு என்று வழங்குவன” (தமிழ் இலக்கியத்தில் உலகாய்தம், நெடுஞ்செழி யன்.க.,15-1990) எனலாம். அந்த வயையில் சங்க இலக்கியத்தில் தெய்வங்களுக்குப் பலி கொடுத்தல் பயன் இல்லை என்பதை விளக்கும் விதமாகக் குறுந்தொகைப் பாடல் அமைந்துள்ளதைக் காணலாம்.

**விடர்முகை அடுக்கத்து விறல்கெழு சூலிக்குக்**

**கடனும் பூணாம், கைந்நூல் யாவாம்**

(குறுந்தொகை,218:1-2)

இப்பாடலில் தலைவி தோழியும் உரையாடு வது போல் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இதில் தலைவன் பொருள் தேடிச்சென்றவன் விரைவில் திரும்ப வேண்டும் என்பதற்காகக் குகைகளையுடைய மலையடுக்கத் துறையும் வெற்றி பொருந்திய கொற்றவைக்குப் பலிக் கடன் நேர்ந்து கொண்டு நோன்பினை மேற்கோள்வர். ஆனால் நம் நிலையை எண்ணி பொருள் தேடச் சென்ற தலைவன் திரும்பாத நிலையில் நாம் அவனுக்காகத் தெய்வங்களை வழிபடுவதும் பலி இடுவதும் பயன் என்ன என்று தலைவி வருத்தத்துடன் உணர்த்துவதை அறியமுகின்றது.

## மதிப்பீடு

* உயிர்ப்பலி நிகழ்த்த தனியாக வேலன் என்னும் பூசாரி ஒருவர் செயல்பட்டுள்ளார். குருதிப்பலி, ஆடு பலி, நரபலி ஆகிய மூன்று பலிகள் நிகழ்ந்ததற்கான சான்றுகள் சங்கப் பாடல்களில் இருந்து நமக்குக் கிடைக்கின்றன.
* முரசு, முருகன், கொற்றவை, பேய் முதலிய வற்றுக்குச் சடங்கு நிகழ்த்திப் பலியிடப் பட்ட செய்திகளை அறிகிறோம்.
* பழங்காலத்தில் உயிர்ப்புச் சக்தியிழந்தால் உயிரிழந்தோர் மீது இரத்தத்தைத் தெளிப்பதன் வழி மீண்டும் உயிர்ப்பிக்க வியலும் என்ற நம்பிக்கை இருந்தது. இதன்வழியே போர் முரசுக்குக் குருதிப்பலி இட்டமையை அறியமுடிகின்றது.
* தலைவி தலைவனைக் காணாத சூழலில் தலைவிக்குப் பசலை நோய் படர்ந்தது என்பதை அறியாத தலைவியின் தாய் வேலன் வெறியாட்டு நடத்தி, உயிர்ப்பலியிடுவதைப் சங்கப் பாடல்கள் உணர்த்துகின்றன. வேலனுக்கு உயிர்ப் பலியிட்டால் தலைவியான மகளின் பசலை நோய் நீங்கும் என்பது நற்றாயின் நம்பிக்கை.
* பலியிடுவதால் என்ன பயன் விளைந்துவிடப் போகிறது என்ற தலைவியின் மனநிலை யையும் சங்கப்பாடல்கள் உணர்த்துகின் றன. இதனைப் பகுத்தறிவு தன்மை கொண்ட உலகாய்தத் தத்துவத்துடன் பொருத்திப் பார்க்க வழியிருப்பதையும் அறிகிறோம்.

## உசாத்துணை நூல்கள்


1. தமிழண்ணல் (உ.ஆ.) 2002, **குறுந்தொகை,** கோவிலூர் மடாலயம் வெளியீடு, கோவிலூர் – 630307.
2. தமிழண்ணல், அண்ணாமலை, (ப.ஆ.) 2004, **அகநானூறு,** கோவிலூர் மடாலயம் வெளியீடு, கோவிலூர் – 630307.
3. சுப்பிரமணியன். ச.வே., (உ.ஆ.), 2003, **பத்துப்பாட்டு**, கோவிலூர் மடாலயம் வெளியீடு, கோவிலூர் – 630307.
4. இளங்குமரன். இரா., 2003, **புறநானூறு,** கோவிலூர் மடாலயம் வெளியீடு, கோவிலூர் – 630307.
5. நெடுஞ்செழியன்.க., 1990, **தமிழ் இலக்கியத்தில் உலகாய்தம்,** மனிதம் பதிப்பம், திருச்சி.
6. மகாதேவன். கதிர்., (உ.ஆ.) 2003, **நற்றிணை,** கோவிலூர் மடாலயம் வெளியீடு, கோவிலூர் – 630307.
7. மகேசுவரன்.சி, 1991, **வாழ்வியற் களஞ்சியம்**, தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியீடு, தஞ்சாவூர்.